**தலைப்பு – 271 திருகோணமலை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 29 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மீண்டெழும் செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | துப்புரவு சேவைகளுக்காக மாவட்ட செயலகத்தால் செலுத்தப்பட்ட ரூபா 2,712,740 தொகை ஏனைய சேவை செலவின விடய குறியீடு 271-1-1-0-1409 இல் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அச் செலவினம் கட்டிட பராமரிப்பு செலவின விடய குறியீடு 271-1-1-0-1303 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இணங்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது செலவினத் தலைப்பு 271-1-1-0-1303 இன் கீழ் துப்புரவு சேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. | செலவின விடயம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான வாடகை வருமானத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் பொது வைப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு அதில் துப்புரவு சேவைகளுக்காக ரூபா 678,740 கூட்டுமொத்தம் செலுத்தப்பட்டது, இதனால் மாவட்ட செயலகத்தின் துப்புரவு சேவைகளுக்கான கிரயம் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இணங்கப்படுகின்றது. மாவட்ட செயலகத்தின் துப்புரவு சேவை செலவினம் குறிப்பிடப்பட்டவாறு கணக்கீடு செய்யப்பட்டது. | செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு அதற்குரிய செலவின விடயங்களிற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களின் (SA-90) பிரகாரம் மீளாய்வாண்டின் போது செலவின விடயக் குறியீடு 9165-0-0-271-0-0-0 இன் கீழ் பொறுப்புக்களாக ரூபா 1,638.45 மில்லியன் தொகை பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அத் தொகை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. CIGAS நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதில் ஏற்பட்ட தவறு காரணமாக இத்தகைய பொறுப்பு காட்டப்பட்ட போதிலும் உண்மையில் அத்தகைய பொறுப்பு ஏற்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் சரியானதும் முழுமையானதுமான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.6.2 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது 15 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து மாவட்டச் செயலகத்தால் சேகரிக்கப்பட்ட வாடகை மற்றும் பராமரிப்புக் கட்டணங்கள் தொடர்பான ரூபா 1,093,800 தொகை அரசாங்க கட்டிட வாடகை வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | வாடகையில் இருந்து உரிய பிரிவுகளின் துப்புரவு கட்டணங்கள் மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தன. அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்ட பராமரிப்புச் செலவினங்கள் மூலம் துப்புரவுச் சேவைகளுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் கோமறன்கடவல பிரதேச செயலகம் மின் சாதனங்களின் பதிவேடொன்றை பேணியிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை நாளதுவரையாக்கி பேணுவதற்கு அறிவுறுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறை பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை நாளதுவரையாக்கி பேணுவதற்கு அறிவுறுத்தப்பட்டது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளிற்கு இணங்க விடுமுறைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டுநிதிகளை விடுவிப்பது தொடர்பான திறைசேரி அறிவுறுத்தல்களின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் விடுவிக்கப்பட்ட கட்டுநிதிகள் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கிராமிய வீடமைப்பு மற்றும் கட்டிடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு என்பவற்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 63.99 மில்லியன் தொகையான கட்டுநிதி உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காத போதிலும் ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டது. | இணங்கப்படுகின்றது. மாவட்டச் செயலகத்தால் பெறப்பட்ட ஒதுக்கீடுகளின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடம் அவ்வப்போது கட்டுநிதிக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் கட்டுநிதி தொகைகள் விண்ணப்பித்தமைக்கான அளவில் பெறப்படாது, முன்னுரிமை மற்றும் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு அந்த நேரத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டியிருந்த செலவினங்களை மேற்கொள்ளும் வகையில் கட்டுநிதிகள் முகாமை செய்யப்பட்டிருந்தன. | பெறப்பட்ட கட்டுநிதிகள் உரிய நோக்கத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்படுவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக ரூபா 3,014 மில்லியன் கட்டுநிதி தொகை கோரப்பட்ட போதிலும், ரூபா 2,667 மில்லியன் கட்டுநிதி மாத்திரமே பெறப்பட்டதன் காரணமாக கோரப்பட்ட கட்டுநிதிக்கும் பெறப்பட்ட கட்டுநிதிக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 347.52 மில்லியன் தொகையாகும். இதன் விளைவாக ரூபா 196.68 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய விலைப் பட்டியல்களாகக் (bills due) குறிப்பிடப்பட்டுள்ளது. | இணங்கப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக கோரப்பட்ட கட்டுநிதி தொகை பெறப்படாததால், ஆண்டின் இறுதியில் செலுத்த முடியாத அனைத்து விலைப்பட்டியல்களும் கையிலுள்ள விலைப்பட்டியல்களாக பட்டியலிடப்படுகின்றன. | கட்டுநிதி விண்ணப்பங்களை உரிய காலத்தில் சமர்ப்பித்து கட்டுநிதிகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 மேலதிக செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 31 ஆம் திகதிய சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் 08/2017 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மூதூர் மற்றும் மொறவெவ பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த இறந்த, திருமணமான மற்றும் புலம்பெயர்ந்தவர்களைக் கொண்ட 17 குடும்பங்களிற்கு ரூபா 219,000 தொகையான சமுர்த்தி படிகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக் குடும்பங்கள் தகுதி பெற்றிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்படுகின்றது.<br><br>இந்த பணத்தை அறவீடு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை நடைமுறைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 மார்ச் 31 ஆம் திகதிய சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்தின் 08/2017 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் பிரகாரம் மானியம் பெற்ற குடும்பத்தின் உறுப்பினர் ஒருவரிற்கு அரசாங்க வேலை கிடைத்தால் மானியம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும் மூதூர் பிரதேச செயலகம் மானியங்கள் இரத்து செய்யப்பட்டிருக்காத 04 குடும்பங்களுக்கு ரூபா 166,000 தொகையை செலுத்தியிருந்தது. | பயனாளிகளை தெரிவு செய்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போதும் ஆவணங்களை சரிபார்த்து நாளதுவரையாக்கும் போதும் ஏற்பட்ட தவறுகளினால் உரித்தில்லாதவர்களுக்கு சமுர்த்தி நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(1) மற்றும் திறைசேரி பிரதிச் செயலாளரின் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் | இணங்கப்படுகின்றது.<br>கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சம்பளங்கள், படிகள், கொடுப்பனவுகள் மற்றும் சத்துணவு படிகள் அம் மீண்டெழும் செலவினங்களில் உள்ளடக்கப்படுகின்றன. அக் கொடுப்பனவுகள் | கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதியேற்பாட்டு பெறுமதியை விஞ்சக்கூடாது. |

| | |
|---|---|
| மீளாய்வாண்டின் நிதியேற்பாடுகளை மீறக்கூடாத போதிலும் 04 மீண்டெழும் செலவினங்கள் மற்றும் 10 மூலதனச் செலவினங்கள் மீளாய்வாண்டிற்காக பெறப்பட்ட முறையே ரூபா 33.62 மில்லியன் மற்றும் ரூபா 96.60 மில்லியன் நிதியேற்பாடுகளை விஞ்சியிருந்தன. | அத்தியாவசியமான கொடுப்பனவுகளாக காணப்படுவதால் கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், நடைபெற்றுக்கொண்டிருக்கும் செயற்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை எதிர்பார்த்து ரூபா 96.60 மில்லியன் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்ததன் காரணமாக மூலதனச் செலவினம் விஞ்சப்பட்டிருந்தது. |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 208 இன் பிரகாரம் திணைக்களம் ஒன்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை சிறந்த முறையில் பயன்படுத்துவது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாக உள்ள போதிலும் 5 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் மாவட்டச் செயலகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 217.14 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் செலவினம் ரூபா 108.31 மில்லியனாக காணப்பட்டதுடன் மிகுதி நிதியேற்பாடு ரூபா 108.83 மில்லியனாக காணப்பட்டது. இதன் விளைவாக, ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் சேமிப்பு 31 சதவீதம் தொடக்கம் 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | இணங்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளுடன் தொடர்புடைய பெரும்பாலான செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அத்துடன் செயற்திட்டங்களுக்கான நிதியேற்பாடுகள் பெறப்பட்ட போதிலும் கட்டுநிதிகள் கிடைக்காததன் காரணமாக நிதியேற்பாடுகளில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | கிடைக்கக்கூடிய நிதிகளை அதிகபட்சமாக பெற்றுக்கொள்வதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து மூலதனச் செலவினங்களுக்காக பெறப்பட்ட ரூபா 33.10 மில்லியன் மொத்த ஒதுக்கீடு உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று காரணமாக பெரும்பாலான செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் நிதிகள் சேமிக்கப்பட்டிருந்தன. | கிடைக்கக்கூடிய நிதிகளை அதிகபட்சமாக பெற்றுக்கொள்வதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். |

## 2.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திருகோணமலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்யப்பட்டு அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு எழுத்துமூலமான பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | பெறுமதி | இணங்காமைகள் | | |
| | ரூபா | | | |
| (அ) 2016 ஏப்ரல் 11 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சுற்றறிக்கை | 13,377,000 | கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 20,000 தொகையான ஊட்டச்சத்து படி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்தி கண்காணிக்கும் போது பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்களினால் பரிந்துரைக்கப்பட்ட உணவுகள் மாத்திரம் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவற்றின் தரத்தை சரிபார்ப்பதற்கும் கந்தளாய் பிரதேச செயலகம் தொடர்ச்சியான பொறிமுறையொன்றை ஸ்தாபித்திருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டிற்காக இது தொடர்பாக எந்தவொரு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கந்தளாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனங்களின் தரத்தை பரீட்சிப்பதற்கு எதிர்காலத்தில் முறையான பொறிமுறையொன்றை உருவாக்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) 2020 மார்ச் 25 இல் வழங்கப்பட்ட பெறுகை கைநூலின் 3.5 மற்றும் 3.6 ஆம் பிரிவுகள் | 641,317 | மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை திருத்தம் செய்வதற்காக ரூபா 200,000 எல்லையை விஞ்சுகின்ற திருத்தங்களிற்கு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் தனிப்பட்ட அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2020 ஆம் ஆண்டில் மொறவெவ மற்றும் கோமறன்கடவல பிரதேச செயலகங்கள் மோட்டார் வாகன திருத்தங்களிற்காக திருத்தச் செலவினங்களை மேற்கொண்டிருந்தன. | உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2019-10-30 ஆம் திகதிய எச்ஏ/எவ்/07/வீஈஆர்ஈபி/சீஓஎம்எம்ஓஎன்/வீஓஎல்-03 ஆம் இலக்க கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களும் இங்கு கருத்தில் கொள்ளப்படுகின்றன. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | குச்சவெளி பிரதேச செயலக உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயலணி செயற்திட்டத்தின் கீழ் புல்மோட்டை-3 RB விளையாட்டரங்கத்திற்கான விளையாட்டு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக குச்சவெளி பிரதேச செயலாளர் புல்மோட்டை முஸ்லீம் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் 2019 ஆகஸ்ட் 06 இல் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்தார். உடன்படிக்கையின் பிரகாரம் அத் திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 செப்தெம்பர் 10 வரையிலும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. அக் காலத்தில் நிலவிய அசாதாரண வானிலை மற்றும் விளையாட்டரங்கத்தில் தொடர்ந்து தண்ணீர் தேங்கியிருந்தமை காரணமாக நிர்மாணப் பணியை தொடங்க முடியாதிருந்தது. | ஒப்பந்த காலப்பகுதியினுள் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குச்சவெளி பிரதேச செயலகத்தின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கட்டுக்குளம் கால்வாய் முறைமையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக ரூபா 1,695,000 இற்கு 2019 நவம்பர் 11 இல் குச்சவெளி பிரதேச செயலாளர் மற்றும் கட்டுக்குளம் விவசாயிகள் அமைப்புடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் அத் திகதிதியிலிருந்து 60 நாட்களுக்குள் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 யூலை 20 வரையிலும் ஒப்பந்த பணிகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. கனமழை காரணமாக, எதிர்பார்த்த காலப்பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் சபிரிகம செயற்திட்டத்தின் கீழ் 03 கிராம சேவையாளர் பிரிவுகளில் எடுத்துச்செல்லக்கூடிய நீர் குழாய்களை அமைப்பதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 3,462,632 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது. அக் காலத்தில் கொரோனா தொற்றுநோய் பரவியமை மற்றும் தேவையான மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் சிரமம் காரணமாக சில பகுதிகள் தாமதமாகியிருந்தன. | -மேற்படி- |

**3.2 பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவில் சபிரிகமக் செயற்திட்டத்தின் கீழ் நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,000,000 பெறுமதியான இரண்டு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டன. | இணங்கப்படுகின்றது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வீதி அபிவிருத்திப் பணிக்காக வீதி தகர்க்கப்பட்டமையினால் குறித்த இடத்திற்கு மூலப்பொருளை எடுத்துச் செல்ல முடியாதிருந்தது. | செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலக செயற்திட்டங்களின் கீழ் உணவு செயன்முறைப்படுத்தும் நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகளின் நிர்மாணம் மற்றும் உணவு செயன்முறைப்படுத்தும் நிலையத்தின் சுகாதார வசதி மேம்பாடு ஆகியவற்றிற்காக குச்சவெளி பிரதேச செயலகத்தினால் 2019 செப்தெம்பர் 18 இல் திரியாய கிராம அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச செயலாளருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. ரூபா 1,455,000 மற்றும் ரூபா 485,000 | இணங்கப்படுகின்றது.<br><br>கொரோனா தொற்றுநோய் காரணமாக, பிரிவில் உள்ள அனைத்து செயற்திட்டப் பணிகளும் மிகவும் மெதுவாக அமுல்ப்படுத்தப்பட்டதுடன் இப்பிரிவில் பெய்த கனமழையால் செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதில் இடையூறு ஏற்பட்டது. | ஒப்பந்த காலப்பகுதியினுள் நிர்மாண பணிகளை பூர்த்தி செய்வற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான இந்த ஒப்பந்தங்கள் 2019 திசெம்பர் 17 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ் இரண்டு ஒப்பந்தங்களும் கணக்காய்வு திகதியான 2020 செப்தெம்பர் 10 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | குச்சவெளி பிரதேச செயலக உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயலணி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,960,000 கிரயத்தில் செந்தூர் நூலக கட்டிடத்தை (கட்டம் I) நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு குச்சவெளி பிரதேச செயலகம் 2019 ஆகஸ்ட் 28 இல் பதவிக்கட்டு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டிருந்தது.<br><br>உடன்படிக்கையின் பிரகாரம் 2019 நவம்பர் 27 அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அது 2020 செப்தெம்பர் 10 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது.<br><br>2019 திசெம்பர் 31 அளவில் இச் செயற்திட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலையில் தொடர்ச்சியான பணியொன்றாக தொடர்வதற்கான கோரிக்கைக்கு அங்கீகாரம் கிடைக்காததன் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | -மேற்படி- |

## 3.4 பணம் விடுவிக்கப்பட்ட போதிலும் முன்னேற்றமடையாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குச்சவெளி பிரதேச செயலகத்தின் கீழ் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலக செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,455,000 பெறுமதியான உணவு செயன்முறைப்படுத்தும் நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் 07 ஆம் இலக்க விதிமுறையின் கீழ் கொடுப்பனவிற்காக மொத்த வேலையின் 90 சதவீதம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. | இணங்கப்படுகின்றது. பெரும்பாலான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு பட்டியலிடும் அலுவலகத்தால் பெறப்பட்டிருந்ததுடன் மிகுதி பொறுப்புக்களாக பட்டியலிடப்பட்டுள்ளன. நிதிகள் கிடைக்காததன் காரணமாக கொடுப்பனவுகள் தாமதமடைந்துள்ளதுடன் மீதமுள்ள பணிகளை பூர்த்தி செய்தல் தாமதமடைகின்றது. | உடன்படிக்கை விதிமுறைகளின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

எனினும் 2020 செப்தெம்பர் 10 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக காணப்பட்ட போதிலும் 2020 யூலை 10 இல் ஒப்பந்த பெறுமதியின் 40 சதவீதமாக ரூபா 579,080 தொகை செலுத்தப்பட்டது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கோமறன்கடவல பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 0.6707 ஹெக்டெயர் காணி 2016 திசெம்பர் 26 இல் 260190 ஆம் இலக்க காணி அளவீட்டு வரைபடத்தின் கீழ் காணித் துண்டு இல. (Lot No.) 78 இன் கீழ் அளவீடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரியில் 4 வருடங்களைக் கடந்திருந்தது. எனினும் காணியின் உரிமைத்துவம் பிரதேச செயலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது.<br><br>கோமறன்கடவல பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணிகளை சுவீகரித்தல் 03 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். | காணியின் உரிமைத்துவம் விரைவாக பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். |
| (ஆ) | கந்தளாய், மூதூர் மற்றும் சேருவில பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான 12 வாகனங்களின் உரிமைத்துவம் பிரதேச செயலாளரிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படுகின்றது.<br><br>இவ் வாகனங்கள் பிரதேச செயலாளரால் பொறுப்பேற்கப்பட முடியாதுள்ளதுடன் இது தொடர்பில் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் உரிமைத்துவத்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019/20 பெரும்போகத்திற்கான நெல் அறுவடையின் துரித கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவு செய்யும் போது கந்தளாய், தம்பலகமுவ மற்றும் சேருவில பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து அவற்றை நெல் ஆலைகளிற்கு விடுவிக்கும் போது அப் பிரதேச செயலகங்களில் முறையே 821 கிலோகிராம், 8,072 கிலோகிராம் மற்றும் 28,457 கிலோகிராம் ஆகிய அளவுகளால் ரூபா 1,868,000 பெறுமதியான நெல் கையிருப்புக்கள் குறைவாக காணப்பட்டன. | இது இயற்கையானது என்றும் பழுப்பு வெட்டுக்கிளிகளால் ஏற்படும் பாதிப்பு என்றும் ஆலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இவ் விடயத்தை விசாரிப்பதற்கு நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரைகள் விவசாய அமைச்சின் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த விடயம் தொடர்பில் புலனாய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டாவது தரப்பினர் நெல்லிலிருந்து வழங்கப்படும் அரிசியின் சதவீதத்தையும், கீரி சம்பாவிற்கு 60 சதவீதத்தையும், ஏனைய ரகங்களுக்கு 65 சதவீதத்தையும் கணிப்பிட்டு அதற்குரிய அரிசி அளவை அருகிலுள்ள லங்கா சதொச களஞ்சியசாலைகளுக்கு வழங்குவதற்கு இணங்க வேண்டியிருந்தது. ஆனால் கந்தளாய் பிரதேச செயலகத்திற்கு 75,130 கிலோவாகவும், சேருவில பிரதேச செயலகத்திற்கு 3,465 கிலோவாகவும், தம்பலகமுவ பிரதேச செயலகத்திற்கு 2,939 கிலோவாகவும் ரூபா 8,319,959 தொகையான அரிசி இருப்புக்கள் குறைந்த அளவிலேயே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | நிறை இழப்பை மீளப்பெறுவதற்கு பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமனம் செய்யப்பட்ட சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் விவசாய அமைச்சின் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததும் தேவைப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படும். | சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த விடயம் தொடர்பில் புலனாய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.7 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இறந்த ஓய்வூதியர்கள் தொடர்பான மாதாந்த அறிக்கைகளை ஒவ்வொரு மாதமும் முதல் புதன்கிழமையன்று உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது கடமைப்பட்டியல் மூலம் பணிப்புரை விடுத்திருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டுக்காக சில பிரதேச செயலகங்களால் இறந்த ஓய்வூதியர்களின் மாதாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவர்களால் தமது ஓய்வூதியத்தை முறையாக செலுத்த முடியாதிருந்தது. | இணங்கப்படுகின்றது.<br><br>இறந்த ஓய்வூதியர்கள் தொடர்பான மாதாந்த அறிக்கைகளை உரிய திகதியில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர்கள் ஊடாக கிராம சேவையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் கடமை பட்டியல்களில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல். |
| (ஆ) | கொவிட் 19 காரணமாக வாழ்க்கை கடினமாக இருக்கும் குடும்பங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,000 படிகளின் கொடுப்பனவு தொடர்பாக நகரங்கள் மற்றும் கடவத்தை, கிண்ணியா, தம்பலகமுவ மற்றும் கந்தளாய் ஆகிய 04 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | குடும்பம் ஒன்றிற்கு மாதம் ஒரு முறை மாத்திரமே செலுத்தப்பட வேண்டிய இச் சமூக நலன் படி 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் 861 தடவைகளில் ரூபா 4,305,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது, ஏனெனில் அது வெவ்வேறு பட்டியல்களில் இருந்து ஒன்றுக்கு மேற்பட்ட முறை செலுத்தப்பட்டுள்ளது. | ஏற்கனவே இரண்டு முறை செலுத்தப்பட்ட படிகள் அறவீடு செய்யப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் படிகள் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2020 ஏப்ரல் 17 மற்றும் 2020 ஏப்ரல் 03 ஆம் திகதிய பிரதமரின் செயலாளரின் பிரீஎவ்/03/2020 (III) மற்றும் பிரீஎவ்/03/2020 (I) ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கு முரணாக 4 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 527 பயனாளிகளுக்கு ரூபா 5,255,000 கூட்டுமொத்தம் செலுத்தப்பட்டிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் படிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | கந்தளாய் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி பயனாளிகளின் பட்டியலின் பிரகாரம் பயனாளிகளுக்கு ரூபா 5,000 உதவித்தொகையை செலுத்தும் போது செலுத்த வேண்டிய தொகை 1,519 ஆக உள்ள போதிலும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி கிராமிய சங்கங்களுக்கு 10 தடவைகளில் அத் தொகையை விட அதிகமாக ரூபா 1,275,000 தொகை வழங்கப்பட்டுள்ளது. | இணங்கப்படுகின்றது.<br><br>கிராமிய குழு உறுப்பினர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ளதன் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பயனாளிகளின் உண்மையான ஆவணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. நிலையேபறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான இலக்குகள் குறித்து அதிகாரிகள் போதுமான அளவு அறிந்திருக்காததுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காணத் தவறியதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான இலக்குகளின் அடைந்துகொள்ளலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | இணங்கப்படுகின்றது.<br><br>நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் மாவட்டத்திற்கு பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்துகொள்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களிற்கான 18 வெற்றிடங்கள், மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களிற்கான 19 வெற்றிடங்கள், இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களிற்கான 166 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களிற்கான 35 வெற்றிடங்கள் உள்ளடங்கலாக வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 238 ஆக காணப்பட்டது. | இணங்கப்படுகின்றது.<br><br>உரிய வெற்றிடங்களை நிரப்புமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு பல தடவைகள் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சேவை தேவைப்பாடுகளை கருத்தில் கொண்டு அத்தியாவசியமாக உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைப்பின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு சிரேஷ்ட, மூன்றாம் நிலை சேவை வகை உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்துவது இன்றியமையாததாக உள்ள போதிலும் சேருவில பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளர் பதவி, நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவி என்பன 2018 ஆம் ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி 2019 ஆம் ஆண்டிலிருந்து 2 ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளது. | இணங்கப்படுகின்றது.<br><br>உரிய வெற்றிடங்களை நிரப்புமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு பல தடவைகள் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |